

Derek Prince
MINISTRIES INDIA

Free Copy

ஒரு தகப்பனின் தலைமைத்துவம்

தந்தையின் பதவியில் தேவன் தலைமைத்துவத்தின் மிகப்பெரிய சிறப்புரிமைகளை தலைமைத்துவத்தின் மிகப்பெரிய பொறுப்புகளுடன் ஒன்றிணைத்துள்ளார். இம்மையக் கருத்து, வேதாகமத்தின் ஆரம்பம் முதல் முடிவுவரை காணப்படுகிறது. பயங்கரமான பொல்லாப்பின் நாட்களில், பெருவெள்ளம் வரும்முன், தேவனுடைய கண்களில் தயை பெற்ற ஒரு மனிதன் இருந்தான் - நோவா. தேவன் நோவாவிடம், "நீயும் உன் வீட்டார் அனைவரும் பேழைக்குள் பிரவேசியுங்கள்; இந்தச் சந்ததியில் உன்னை எனக்கு முன்பாக நீதிமானாகக் கண்டேன்" (ஆதியாகமம் 7:1) என்று கூறினார். நோவாவின் நீதியே, அவன் முழு குடும்பத்திற்கும் பாதுகாப்பை அருளியது. தேவனுக்குமுன், தன் குடும்பத்தின் தலையாக நோவா தன் குடும்பத்தை எடுத்துக்கொண்ட படியால், தன் முழு குடும்பத்தையும் பேழைக்குள் கொண்டுவரும் சிலாக்கியத்தை பெற்றான்.

வீட்டில் தலைமைத்துவத்தை எடுத்துக்கொள்ளுதல்

பின்பு - பெருவெள்ளத்திற்கு பிறகு-ஒரு விசேஷித்த தேசத்தின் தலைவனாக மாறக்கூடிய ஒரு மனிதனை தேவன் தேடினார். முழு மனுகுலத்திற்கும் விசேஷித்த ஆசீர்வாதங்களை கொண்டு வர முன்குறிக்கப்பட்டவர். இறுதியாக தாம் தேடும் அந்த மனிதனை தேவன் ஆபிரகாமில் கண்டார். ஆதி. 18:19 ஆபிரகாமை தேவன் தன் காலத்தில் இருந்த எல்லா மனிதரிலும் தெரிந்தெடுப்பதற்கு, அவன் குணாதிசயங்களில் இருந்த சிறப்பம்சத்தை வெளிப்படுத்துகிறது:

> *"கர்த்தர் ஆபிரகாமுக்குச் சொன்னதை நிறைவேற்றும்படியாய் அவன் தன் பிள்ளைகளுக்கும், தனக்குப் பின்வரும் தன் வீட்டாருக்கும்: நீங்கள் நீதியையும் நியாயத்தையும் செய்து, கர்த்தருடைய வழியைக் காத்து நடவுங்கள் என்று கட்டளையிடுவான் என்பதை அறிந்திருக்கிறேன் என்றார்."*

தேவன் ஆபிரகாமை ஒரு பிரதான காரணத்திற்காக தெரிந்துக்கொண்டார்; தன் பிள்ளைகளையும், தன் வீட்டாரையும் கர்த்தருடைய வழியில் நடப்பதற்கு, அவர்களை பயிற்றுவித்து ஒழுங்குப்படுத்த அவனை நம்பலாம் என்று தேவன் அறிந்திருந்தார். மனிதனுடைய இத்தன்மைக்கு தேவன் எவ்வளவு முக்கியத்துவத்தை செலுத்தி இருக்க வேண்டும்!

ஆபிரகாம், தன் பிள்ளைகளுக்கும் வீட்டாருக்கும் "கட்டளைக்கொடுப்பான்" என்று தேவன் எதிர்ப்பார்த்தார். கட்டளை என்ற வார்த்தை சில மேற்க்கத்திய காதுகளுக்கு ஜனநாயக விரோதமாக ஒலிக்கிறது. ஆனால் இதுவே இப்பகுதியின் முக்கிய வார்த்தை. ஒரு மனிதன் கட்டளையிட உரிமை மற்றும் பொறுப்பை சில நேரங்களில் பெறுகிறான். அவன் தேவனுடைய பிரதிநிதியாகவும், தன் வீட்டின் ஆளுநராகவும் செயலாற்றும்போது அவன் பெலவீனமானவனாகவோ, ஒத்துப்போகிறவனாகவோ இருக்கக்கூடாது. "நீங்கள் இப்படித்தான் செய்ய வேண்டும்" என்று தன் மனைவி மற்றும் பிள்ளைகளுடன் அவர் உறுதியாக பேச வேண்டும்.

சில ஆண்கள், "என் மனைவி பிள்ளைகளிடம் நான் அப்படி பேசினதே இல்லையே! அப்படி பேசுவதை கேட்டால், என்ன சொல்வார்கள்?"

என்ன செய்வார்கள் என்று நான் சொல்லட்டுமா? அந்த அதிர்ச்சியிலிருந்து மீள பல நொடிகள் ஆனாலும், இறுதியாக - "ஒரு ஆண் எங்கள் வீட்டில் இப்போதாவது தோன்றி இருக்கிறாரே!" என்பார்கள். யார் வழிநடத்த வேண்டும் என்பதை ஒரு மனைவியும் பிள்ளைகளும் நிச்சயமாய் அறிவார்கள். எனவே தன் இடத்தை எடுத்துக்கொள்ளும் தகப்பனுக்கு அவர்கள் சரியான கனத்தை கொடுப்பார்கள். கணவர்கள் தவறுகிறதினாலேயே பல வீடுகளில் பெண்கள் தலைமைத்துவத்தை எடுக்க வேண்டியதாகிறது. தங்கள் கணவர் அப்பொறுப்பை ஏற்றுக்கொள்வாரானால், அவர்கள் சந்தோஷமாக அதை விட்டுக்கொடுப்பார்கள்.

லோத்தின் தோல்வி

ஆபிரகாமின் குணாதிசயமும் அவன் நடத்தையுமே அவனை தேவனுக்கு பரிந்துரைத்ததென்று பார்த்தோம். ஆனால் ஆபிரகாமின் சகோதரனின் மகனாகிய லோத்து அவருக்கு எதிரிடையாய் நிற்கிறார். லோத்து ஆபிரகாமுடன் புறப்பட்டு சென்றார். அவர் தேவனுடைய ஆசீர்வாதங்களை கண்டு, தேவனுடைய வாக்குத்தத்தங்களை கேட்டும் இருந்தார். ஆனாலும் ஒரு முட்டாள்தனமான மற்றும் பொல்லாத முடிவை செய்தார். தன் குடும்பத்தை சீரழித்த சோதோம் பட்டணத்திற்கு அழைத்து சென்றார் (ஆதி. 13:10-13). லோத்தின் பாடம், சிந்திக்கும்போதெல்லாம் என்னை ஆழமாய் அசைக்கின்றது. தன் குடும்பத்தை சோதோமுக்குள் அழைத்து சென்றார். ஆனால் அவர்களை மறுபடியும் வெளியே அழைத்து செல்ல வில்லை! தேவனுடைய நியாயத்தீர்ப்பு பட்டணத்தின் மேல் வந்தபோது, லோத்து தன் இரண்டு குமாரத்திகளை தவிர, தன் முழு குடும்பத்தையும் இழந்தார் (ஆதி. 19:15-26)

தகப்பன்மாரே, இதை நான் உங்களுக்கு தெளிவாக சொல்லுகிறேன்: நீங்கள் தேவனுடைய வழியை அறிந்திருந்தால், லோத்தின் முட்டாள்தனமான போக்கை பின்பற்றாதிருங்கள். நீங்கள் உங்கள் குடும்பத்தை சோதோமுக்குள் அழைத்து செல்லலாம் - பாவ இன்பங்கள் மற்றும் மயக்கங்கள் நிறைந்த உலகிற்குள் அழைத்து செல்லலாம். உலகம் உங்கள் குடும்பத்தின் மையமாக மாறலாம். ஒரு நாள் உலகத்தை வெறுத்து, தேவனுடைய வழிக்கு நீங்கள் திரும்பலாம். ஆனால், இதை மனதில் வைத்துக்கொள்ளுங்கள்; உங்கள் குடும்பம் உங்கள் பின் வர ஆயத்தமில்லாதிருப்பார்கள். சோதோமுக்குள் அவர்களை நடத்திக்கொண்டுபோன நீங்கள் அவர்களை வெளியே கொண்டுவர முடியாமல் போகலாம்!

யோசுவாவின் தேர்வு

தேவனுடைய ஜனங்களின் இன்னொரு தலைவனை பார்ப்போம் - யோசுவா. இஸ்ரவேலை வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட தேசத்துக்குள் அழைத்து வந்தபின், தன் வாழ்க்கையின் முடிவில், ஒரு தீர்மானத்தைக்கொண்டு அவர்களுக்கு சவால் விடுகிறான்:

> *யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்து கொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக்குக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றார்.* (யோசுவா 24:15)

பல ஆண்டுகளாக யோசுவாவின் இந்த வார்த்தைகளை குறித்து ஆச்சரியப்பட்டேன். தேவனை சேவிக்க அவர் தனிப்பட்ட தீர்மானம் எடுக்கலாம். ஆனால் தன் குடும்பம் தேவனை சேவிக்கும் என்று அவரால் உறுதியாக எப்படி கூற முடியும்? ஒரு நாள் யோசுவாவின் உறுதிக்கு அடிப்படையை புரிந்துக்கொண்டேன். அவர்தன் வீட்டில், தேவன் கொடுத்த இடத்தை எடுத்துக்கொண்டார்-தீர்க்கதரிசி, ஆசாரியன் மற்றும் ராஜாவாக. எனவே அந்த ஸ்தலத்தில் தன்னை கனம்பண்ண அவன் தேவனுடைய உண்மையின் மேல் நம்பிக்கை வைக்க முடியும் என்று அறிந்திருந்தான் - தன் குடும்பத்துக்காக செய்த ஆசாரிய மன்றாட்டிற்கு பதில் அளிப்பதினால், அவர்கள் சார்பாக அவன் செய்த தீர்க்கதரிசனமான அறிக்கையை உறுதிப்படுத்துவதினால் மற்றும் அவர்கள் மேல் தன் ராஜரீக அதிகாரத்தை நிலைநிறுத்துவதினால் தான் என்னவாய் இருந்தார் என்பதில் யோசுவாவின் உறுதி நிலைக்கவில்லை, மாறாக தந்தையின் ஸ்தானம் என்று தேவன் கொடுத்த அந்த இடத்திற்கு தேவனுடைய உண்மையை சார்ந்திருந்தார்.

ஒரு தகப்பனின் விசுவாசம்

புதிய ஏற்பாட்டில் அடிக்கடி மேற்கோள் காட்டப்பட்ட பகுதிகளில் ஒன்றைப் பார்ப்போம் - அப்போஸ்தலர் 16:30-31. பிலிப்பிய சிறைக்காவலர், ஆழ்ந்த உணர்த்துதலோடு, பவுல் மற்றும் சீலாவிடம், "ஐயா, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்கிறார். அவர்கள் கூறின பதில்; "ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி அப்போது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்."

இவ்வாக்குத்தத்தை குடும்பத்தின் இரட்சிப்பிற்காக கவலைக்கொண்டிருந்த ஒரு பெண்மணியிடம் நான் ஒரு நாள் மேற்கோள் காட்டிக்கொண்டிருந்தபோது, பரிசுத்த ஆவியானவர் உன் ஆவியுடன் திடமாய் பேசினார்: "இந்த வாக்குத்தத்தம் ஒரு ஆணோடு பேசப்பட்டது. ஒரு கணவனாய், தகப்பனாய், பிலிப்பிய சிறைக்காவலனுக்கு தன் முழு குடும்பத்தின் இரட்சிப்பை கோர, தேவன் கொடுத்த உரிமையை உடையவராய் இருந்தார்." ஒவ்வொரு தகப்பனுக்கும் தன் குடும்பத்தின் இரட்சிப்பிற்காக விசுவாசத்தை பயிற்றுவிக்க, அவரது

தலைமைத்துவத்தின் காரணமாக தேவன் உரிமையையும் பொறுப்பையும் அளித்துள்ளார்.

அப்படியானால், தங்களுக்காக தனிப்பட்ட விசுவாசத்தை பயிற்றுவிக்காமல், தகப்பனுடைய விசுவாசத்தினால் மட்டும் குடும்ப அங்கத்தினர்கள் இரட்சிக்கப்பட முடியுமா? இல்லை. அப்படிப்பட்ட அர்த்தம் இல்லை. தேவன் அளித்துள்ள தகப்பன் என்னும் ஸ்தானத்தில் இருக்கும் ஒருவருடைய விசுவாசம் மற்றும் ஊழியத்தின் மூலம் அவருடைய குடும்பத்திலும் ஒவ்வொரு நபரும், கிறிஸ்துவில் தனிப்பட்ட விசுவாசத்திற்கு வந்து, அப்படியாக இரட்சிக்கப்படுவார்கள்.

விசுவாசிக்கிற ஒரு தாய் அல்லது வேறு குடும்ப அங்கத்தினரின் விசுவாசத்தினால் ஒரு குடும்பம் இரட்சிப்படையாது என்று கூறுவதற்கல்ல. எரிகோவின் வேசியாகிய ராகாபின் விசுவாசமும் தைரியமும் அவளுடைய முழு குடும்பத்திற்கும் இரட்சிப்பை அளித்தது. அவள் வாழ்ந்த பட்டணம் முழுமையாக அழிவை கண்டபோதிலும் "வேவிகாரரான அந்த வாலிபர் உள்ளேபோய், ராகாபையும் அவள் தகப்பனையும் அவள் தாயையும் சகோதரர்களையும் அவளுக்குள்ள யாவையும் அவள் குடும்பத்தார் அனைவரையும் வெளியே அழைத்துக்கொண்டு வந்து, அவர்களை இஸ்ரவேல் பாளயத்துக்குப் புறம்பே இருக்கும்படி பண்ணினார்கள்" (யோசுவா 6:23). இவை அனைத்தும் ராகாபின் விசுவாசமே.

ஆனால், மற்ற எல்லாரையும்விட ஒரு தகப்பனுக்கு தன் குடும்பத்தோடு வித்தியாசமான உறவு உள்ளது. குடும்பத்தின் தலையாக தேவன் கொடுத்துள்ள இடத்தை அவன் எடுத்துக்கொண்டார், அதினோடு தன் குடும்பத்தின் இரட்சிப்பை கோருவதற்கான தெய்வீக உரிமை இணைந்துள்ளது. இந்த உரிமை, தகப்பனுடைய தனிப்பட்ட விசுவாசத்தை சார்ந்தது மட்டுமல்ல, அவர் வகிக்கும் தகப்பனின் ஸ்தானத்தை சார்ந்ததாய் இருக்கிறது. தேவனுடைய கடமை அந்த ஸ்தானத்தை சேர்ந்தது, தனி மனிதனை அல்ல.

தவறும் தகப்பன்மாரால் ஏற்படும் விளைவுகள்

பெற்றோர்-குறிப்பாக தகப்பன்மார் - தேவன் கொடுத்துள்ள பொறுப்புகளை செய்ய தவறும்போது, குடும்பத்தில் ஏற்படும் பொல்லாத விளைவுகளை குறித்து தேவனுடைய வார்த்தை அநேக எச்சரிப்புகளை கொடுக்கின்றது. உபாகமம் 28:15-68, தேவனுடைய நியாயப்பிரமாணத்திற்கு கீழ்ப்படிய தவறுவதினால் இஸ்ரவேலுக்கு வரக்கூடிய சாபங்களில் பெரும் பட்டியலை பார்க்கின்றோம். இப்பட்டியலை ஒரு நாள் வாசிக்கும்போது, 41ம் வசனம் எனக்குள் தாக்கம் ஏற்படுத்தியது; "நீ குமாரரையும் குமாரத்திகளையும் பெறுவாய், ஆனாலும் அவர்கள் உன்னோடேகூட இரார்கள்; அவர்கள் சிறைப்பட்டுப்போவார்கள்." இது பிரதானமாக தகப்பன்மாருக்கே சொல்லப்பட்டது. ஏனெனில் "பெறுவது" தகப்பன்மாரின் பங்கைக் குறிக்கும்.

நம்மை "மகிழ்விப்பதற்காகவே" தேவன் நமக்கு பிள்ளைகளைக் கொடுத்திருக்கிறார் என்ற எளிய எண்ணம் எனக்கு ஏற்பட்டது. பெற்றோராகிய நமக்கு அவர்கள் எப்போதும் கூட இருக்கும் மகிழ்ச்சியின் ஊற்றாய் இருக்க ஏற்படுத்தப்பட்டவர்கள். ஆனால் எத்தனை பெற்றோர் இன்று தன் பிள்ளைகளில் மகிழ்கிறார்கள்? ஒரு பெரிய குடும்பத்துடைய ஒரு பாப்டிஸ்ட் பிரசங்கி ஒருமுறை ஜெபித்தது எனக்கு நினைவிருக்கிறது. "ஆண்டவரே, எங்கள் பிள்ளைகள் சுமைகள் அல்ல, ஆசீர்வாதங்கள் என்பதை நினைவில் கொள்ள எங்களுக்கு உதவும்!" என்றார். தன் ஜெபத்திற்கு அவர் என்னவோ நல்ல பதிலை எதிர்ப்பார்க்கவில்லை என்பதே என்னுடைய உணர்வாய் இருந்தது.

பெற்றோராக, நாம் ஒரு காரியத்தை குறித்து உறுதியாய் இருக்க முடியும்; நம்முடைய பிள்ளைகள் நம்முடைய உண்மையான மனநிலையை அடையாளம் காண்பார்கள் - அவர்கள் பாராமா, ஆசீர்வாதமா என்ற நம்முடைய மனநிலையை அறிவார்கள். அதற்கு ஏற்றவாரே நமக்கு பதிலும் அளிப்பார்கள்.

நம்முடைய பிள்ளைகளில் மகிழ்ச்சிக்கொள்ளுகிறோம் என்பதை வெளிக்காட்டும் விதத்தில் நாம் அவர்களை ஒழுங்குப்படுத்தி, அவர்களுடன் உறவு வைக்காவிட்டால், முடிவு என்னவாக இருக்கும்? உபா. 28:41 தெளிவாக கூறுகிறது: "அவர்கள் சிறைப்பட்டுப்போவார்கள்" மேற்கத்திய கலாச்சாரத்தில் கோடிக்கணக்கான நம்முடைய பிள்ளைகளுக்கு இது நிகழவில்லை / அவர்கள் "சிறையிருப்புக்குள்" சென்றுள்ளார்கள்

உங்களுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட செய்திமடல் வருமானால் இமெயில் முகவரி secretary@derekprince.in அல்லது அலை பேசி 9585538202 தொடர்புகொண்டு எந்த பெயரில், விலாசத்தில் பல செய்தி மடல்கள் வருகிறது என்பதை தெரியப்படுத்தவும்.

உங்கள் கவனத்திற்கு!!!

உங்கள் விலாசம் மாறும் பொழுது தயவுசெய்து எங்களுக்குத் தெரியப்படுத்துங்கள்.

ISSUE #024

இன்னும் தேவையா?

- ○ ஆம், இந்த இலவச இதழில் எனக்கு இன்னும்------பிரதிகள் தேவை.
- ○ தயவு செய்து அடுத்த முறை எனக்கு கூடுதல் பிரதிகள் அனுப்பவும்.
- ○ முதல் முறையாக பெறுகிறேன், இனி தொடர்ந்து எனக்கு அனுப்பவும்.

See over for address details...

பதிவு செய்க!

- ○ தயவுசெய்து டெரிக் பிரின்ஸ் - இந்தியா ஊழியங்களைப் பற்றிய ஊழியத் தகவல்களையும், புதிய புத்தகம் / சி.டி விவரங்களையும் எனக்கு அனுப்பி வைக்கவும்.
- ○ ஈமெயில் மூலமாக அனுப்பவும்.
- ○ கடிதம் மூலமாக அனுப்பவும்.

- போதை பொருள், தவறான பாலியல் உறவு, மாந்திரீகம் மற்றும் எண்ணற்ற பிசாசின் கண்ணிகள். அப்படி சிறைப்பட்ட பிள்ளைகள், அந்நிய சக்தியால் அடிமைத்தனத்திற்கு கொண்டு செல்லப்பபட்டதைப் போலவே இருக்கின்றனர். தேவனுடைய விதிகளை கற்றுக்கொடுக்க தவறி, தங்கள் பிள்ளைகளுடன் சரியான உறவில் வராத தகப்பன்மாரின் வாசலில் தான் இதன் பொறுப்பு உள்ளது.

தேவனுடைய சட்டத்தை அறிவித்தல்

மல்கியா 2:7 ஆசாரியனை தேவனுடைய சட்டத்தை காக்கிறவனாகவும் விளக்குகிறவனாகவும் சித்தரிக்கிறது; "ஆசாரியனுடைய உதடுகள் அறிவைக் காக்கவேண்டும்; வேதத்தை அவன் வாயிலே தேடுவார்களே." (இங்கு சொல்லப்படும் "அறிவு" தேவனுடைய சட்டத்தின் அறிவு). தன் வீட்டின் ஆசாரியனாய், ஒவ்வொரு தகப்பனுக்கும் இப்பொறுப்பு உள்ளது - தன் குடும்பத்திற்கான அவன் தேவனுடைய சட்டத்தை காத்து, விளக்கவேண்டும்.

ஒரு தேசத்தின் தகப்பன்மார்/ஆசாரியர்கள் தங்கள் பொறுப்பில் தவறினால் என்ன? ஓசியா 4:6ல், இதனால் விளையும் வேதனை நிறைந்த சூழ்நிலையை தேவன் கூறுகிறார்:

> *“என் ஜனங்கள் அறிவில்லாமையினால் சங்காரமாகிறார்கள்; நீ அறிவை வெறுத்தாய் ஆகையால் நீ என் ஆசாரியனாயிராதபடிக்கு நானும் உன்னை வெறுத்துவிடுவேன்; நீ உன் தேவனுடைய வேதத்தை மறந்தாய், ஆகையால் நானும் உன் பிள்ளைகளை மறந்துவிடுவேன்.”*

தேவனே நம்முடைய பிள்ளைகளை "மறப்பேன்" என்று கூறுவது எவ்வளவு பயங்கரமான காரியம்! ஒரு தகப்பன் தேவனுடைய சட்டத்தை அறிவும் அறிவை தள்ளிவிடும்போது, அவர் தன் குடும்பத்தின் சார்பாக, தன் ஆசாரிய ஊழியத்தை நிறைவேற்ற தகுதியற்றவராக மாறுகிறார். அதின் விளைவாக பிள்ளைகள் தகப்பனுடைய அதிகாரத்தின் பாதுகாப்பு மற்றும் நிழலை இழந்து, சாத்தானின் சகல கண்ணிகளுக்கும், வஞ்சனைகளுக்கும் இரையாகின்றனர். நம்முடைய தேசம் ஏன் தேவனால் மறக்கப்பட்ட பிள்ளைகளால் நிறைந்திருக்கிறது?

தேவனுடைய உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்களுக்கும் வளங்களுக்கும் புறம்பான பிள்ளைகளே அதற்கு காரணம் - அவர்கள் தகப்பன்மார் தேவனுடைய சட்டத்தை மறந்தார்கள்!

ஒரு வாக்குத்தத்தத்தின் வார்த்தை

மல்கியா 4:5-6ல், பழைய ஏற்பாட்டில் நமக்கு இறுதியாக கொடுக்கப்பட்ட வார்த்தை ஒரு சாபம் - ஆனால் அது ஒரு வாக்குத்தத்தமும் கூட:

> *“இதோ, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமுமான நாள் வருகிறதற்குமுன்னே நான் உங்களிடத்திற்கு எலியா தீர்க்கதரிசியை அனுப்புகிறேன். நான் வந்து பூமியைச் சங்காரத்தால் அடிக்காதபடிக்கு, அவன் பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்புவான்.”*

தீர்க்கதரிசன வெளிப்பாட்டினாலே, யுகத்தின் முடிவில் இருக்கபோகும் மிக அவசர சமுதாய பிரச்சனையை வேதம் இங்கு காண்பிக்கிறது: பிளவுப்பட்ட, சண்டையால் சிதைந்த வீடுகள், அதில் ஒருவருக்கொருவர் அந்நியராக்கப்பட்ட பெற்றோர்கள் மற்றும் பிள்ளைகள். தேவனுடைய வார்த்தை எவ்வளவு துள்ளிமானது! இந்த நிலைதான் இன்று நம்மை எதிர்கொண்டிருக்கிறது. இது திருப்பப்படாவிட்டால், ஒரே விளைவுதான் இன்று நம்மை எதிர்கொண்டிருக்கிறது. இது திருப்பப்படாவிட்டால், ஒரே விளைவுதான் காத்திருக்கிறது - பூமியின் மீது சாபம். ஆனால், "பிதாக்களுடைய இருதயத்தைப் பிள்ளைகளிடத்திற்கும், பிள்ளைகளுடைய இருதயத்தை அவர்கள் பிதாக்களிடத்திற்கும் திருப்பும்" ஒரு ஊழியத்தை அனுப்புவேன் என்று கர்த்தர் வாக்குக்கொடுக்கிறார். தேவனுக்கு நன்றி, நிலைமை நம்பிக்கையற்றதாக இல்லை! நமது வீடுகளில் நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பு இன்னும் சாத்தியமாக உள்ளது. இதுவே இன்று நமக்கு தேவனுடைய ஆவியானவரின் செய்தி.

ஆனால் இதில் தேவனுடைய வார்த்தை ஏற்படுத்தும் வரிசையை நாம் கவனிக்க வேண்டும். முதலாவது தகப்பன்மார் தங்கள் பிள்ளைகளிடத்தில் திரும்ப வேண்டும். ஒவ்வொரு வீட்டிலும் சீர்படுதல், தகப்பனிடம் இருந்தே ஆரம்பமாக வேண்டும். தகப்பன்மார் தங்களை தாழ்த்தி, தங்கள் பிள்ளைகள் முன் மனந்திரும்புவார்கள் ஆனால், அப்போது பிள்ளைகளுடைய இருதயமும் தங்கள் பிதாக்களிடம் திரும்பும். ஆனால், முதல் மாற்றம் தகப்பன்மாரிடம்தான்.

தகப்பன்மாரே, நீங்கள் ஆண்களாக இருக்க உங்களுக்கு நான் சவால் விடுகிறேன்! தேவனுக்கு கீழ் எழுந்து, உங்கள் குடும்பத்தின் தலையாக உங்கள் இடத்தை எடுத்துக்கொள்ளுங்கள்! நீங்கள் ஒரு துரோகியாக இருந்திருந்தால், மனந்திரும்பி, உங்களை மன்னிக்கும்படி

உங்கள் விபரம்

NAME: MR / MRS / MISS ....

ADDRESS: ....

....

CITY: .... POSTCODE: ....

EMAIL: ....

இந்த இதழ் முற்றிலும் இலவசமானது. ஆனால் செலவுகளை சந்திக்க நீங்கள் உதவலாம்.

நன்கொடை: ₹

Derek Prince
MINISTRIES INDIA

Contact us

www.derekprince.com/en-in
admin@derekprince.in
Ph : 9585538201
A40, ANNA NAGAR
MAIN ROAD,
SIVAPRAGASAM SALAI,
Trichy - 620017